OS No.93/2018, நாள்: 14.12.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோட்டீஸ்வரன் | வயது | : 26 |
| தந்தை பெயர் | : ராமசாமி, வேலை: விவசாயம் (கோவில் தர்மகர்த்தா) | | |
| கிராமம் | : அகரம் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

<u>பி.வா.சா.1 ___ கோடிஸ்வரன் ஆஜர் முதன்மை விசாரணை :-</u>

நான் இவ்வழக்கில் பிரதிவாதி. நான் என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 29.07.2008ம் தேதியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் செயல்முறைகள் அசல் ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 8.8.2008ம் தேதியில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து என் தந்தையிடம் சிலைகளை ஒப்படைத்தபோது கொடுத்த ஒப்பதல் ரசீது ஏற்கனவே பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 8.8.2008ம் தேதியில் போச்சம்பள்ளி வட்டாட்சியர் வழங்கிய சான்று பி.வா.சா.ஆ.3 ஆகும். அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக நோட்டீஸ் பி.வா.சா.ஆ.4 ஆகும். மண்டல பூஜைக்கான அழைப்பிதழ் பி.வா.சா.ஆ.5 ஆகும். 2000 முதல் 2009ம் ஆண்டு வரையிலான மேற்படி கோவில்களின் வரவு செலவு கணக்கு புத்தகங்கள் (எண்ணிக்கை-5) அசல் பி.வா.சா.ஆ.6 ஆகும். பழைய மற்றும் புதிய கோவில்களின் புகைப்படங்கள் குறுந்தகட்டுடன் பி.வா.சா.ஆ.7 ஆகும். தாவா தள்ளுபடி ஆக வேண்டும்.